## சிறுநில உடைமையாளர் பெருந்தோட்டங்கள் தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (எஸ்பிஈஎன்டீபீ) - 2014

சிறு நில உடைமையாளர் பெருந்தோட்டங்கள் தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைநத ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2007 மே 08 ஆந் திகதிய 712-எல்கே இலக்க கடன் உடன்படிக்கையின் V ஆம் உறுப்புரையின் 02(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு, காலம் என்பன

சிறு நில உடைமையாளர் பெருந்தோட்டங்கள் தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு நிகழ்ச்சித் திட்டத்தின் அமுலாக்கல் முகவராகும். நலன்பெறுனர்களின் நிறுவகரீதியான இயலுமையினையும் சமரசம் செய்தல் நுட்பங்களையும் வலுப்படுத்துதல், சிறுதோட்ட நில உடைமை தேயிலை மற்றும் இறப்பர் செய்கையாளர்களின் காணிக் குத்தகை நிலைமையினை மேம்படுத்துதல், முன்னேற்றகரமான அறுவடைக்குப் பிந்திய கையாளலின் ஊடாக உற்பத்தியாளர்களின் இலாபத்தினை அதிகரித்தல், அவர்களின் உற்பத்திப் பொருட்களினை களஞ்சியப்படுத்தல், செயல்முறைப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல், கிராமிய நிதி மற்றும் கடன் சேவைகளை அபிவிருத்தி செய்தலும் விரிவுபடுத்துதலும், பெண்கள் தங்களின் வாழ்க்கை நிலைமையினை மேம்படுத்துதலினையும் தங்களின் வறுமையினைக் குறைப்பதனையும் உறுதிப்படுத்துதல் என்பனவே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களாகும்.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 3,827.82 மில்லியனுக்குச் சமமான 29.22 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதில் ரூபா 2,954,05 க்குச் சமமான 22.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் நிதியளிக்கப்படும். மேலும், பங்குபற்றும் நிதி நிறுவனங்கள் மற்றும் ஏனைய நலன்பெறுநர்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட உதவு தொகைகள் முறையே ரூபா 248.9 மில்லியனுக்குச் சமமான 1.9 மில்லியன் ூஅமெரிக்க டொலர்கள் மற்றும் ரூபா 132.31 மில்லியனுக்குச் சமனான 1 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். நிகழ்ச்சித்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2007 நவம்பர் 06 இல் ஆரம்பித்திருந்ததுடன் 7 ஆண்டு காலத்திற்குள் அதனைப் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. அமைச்சரவை தனது 2014 செப்தெம்பர் 05 ஆந் திகதிய கூட்டத்தில் 2016 டிசெம்பர் 31 வரை நிகழ்ச்சித் திட்ட காலத்தை நீடித்திருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அல்லாத நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், அமுலாக்கல் மற்றும் பேணுதல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்தல் மற்றும் பயன்படுத்துதல், காலத்திற்கேற்ப நியாயபூர்வமான கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பனவும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு ஏற்ப 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தேவைக்கேற்ப மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிககைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, வரவு, செலவுத் திட்ட நிதியேற்பாடு தொடர்பான சில குறிப்பிடத்தக்க புள்ளி விபரம் மற்றும் மீளாய்வாண்டினதும் 2014 டிசெம்பர் 31 வரையிலான நிதிப் பயன்பாடு என்பன கீழே தரப்பட்டுள்ளன.

| தோற்றுவாய் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிக்க உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் கீழான ஒதுக்கீடு | நிதிப்பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின்போது | | 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| | | | ரூபா | | | | |
| வி.அ.ச.நி | 22.55 | 2,954.05 | 561.60 | 3.14 | 425.77 | 16.33 | 1,924.54 |
| இ.அ | 3.76 | 492.56 | 38.40 | - | 29.67 | - | 149.17 |
| பங்குபற்றும் நிதிசார் நிறுவனங்கள் | 1.90 | 248.90 | 26.75 | - | 23.09 | - | 86.97 |
| நலன்பெறுநர் உதவு தொகை | 1.01 | 132.31 | 31.08 | - | 55.06 | - | 132.81 |
| மொத்தம் | 29.22 | 3,827.82 | 657.83 | 3.14 | 533.59 | 16.33 | 2,293.49 |

மேற்படி தகவல்களின் பிரகாரம், மொத்த ஒதுக்கீட்டின் 72 சதவீதத்தைக் குறிக்கும் கடன் தொகையாகிய 16.33 அமெரிக்க டொலர்கள் செயற்திட்டத்தின் 7 ஆண்டுகள் முடிவடைந்த போதிலும் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு

பயன்படுத்தப்பட்டிருந்தது. எஞ்சிய 6.22 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செயற்திட்டத்தின் 2 ஆண்டு காலத்தில் பயன்படுத்தப்படுவதானது கணக்காய்வில் ஐயத்திற்கிடமாகத் தென்படுகின்றது.

## 3.2 பௌதீக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மத்திய நாட்டு உப நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கண்டி, நுவரெலியா, கேகாலை மாவட்டங்களில் குறைவான உற்பத்தித் திறனுள்ள தானியங்களைப் புனரமைப்பதற்கான உள்ளகத் தாவரப் பயிர்களை விநியோகிப்பதற்கென ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு ரூபா 1.5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதில் 62.4 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 936,658 மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டு முடிவில் பௌதீக இலக்குகள் 36 மற்றும் 55 சதவீதம் மாத்திரமே அடையப்பட்டிருந்தது.

(ஆ) மத்திய நாட்டு உப நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2013 ஜுன் ஆட்டுப்பால் யோகட் உற்பத்திக்காக தயாரிக்கும் யோகட் கோப்பை அடைக்கும் ரூபா 490,000 பெறுமதியான இயந்திரம் ஒன்றை நலன் பெறுநர் ஒருவருக்கு நிகழ்ச்சித்திட்டம் வழங்கியிருந்தது. 2015 ஜுன் மாதம் வரையிலும் கூட நலன்பெறுநர் உற்பத்தியைத் தொடங்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மொனராகல உப நிகழ்ச்சித்திட்டம் 20 குடிநீர் கிணறுகளை நிர்மாணிப்பதற்குத் திட்டமிட்டு மீளாய்வாண்டின்போது ரூபா 4,100,000 இதற்கென வழங்கியிருந்தது. 6 குடிநீர் கிணறுகளை நிர்மாணிப்பதற்கு மொத்தமாக ரூபா 144,000 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தபோதும், கிணறுகளைத் தோண்டுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட இடம் அதற்குப் பொருத்தமற்றது என கணக்காய்வுக் களப் பரிசோதனையில் புலனாகியது. 2015 ஏப்ரல் வரை ஒரு கிணறேனும் பூர்த்தியடையாது இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிகழ்ச்சித்திட்டத்தினது மத்திய நாட்டு உப நிகழ்ச்சித்திட்டம் மீளாய்வாண்டின் போது 178 பயிற்சி திட்டங்களை நடாத்துவதற்கு ரூபா 5.5 மில்லியன் மதிப்பீடு செய்திருந்தபோதும், 38 சதவீதத்தைக் குறிக்கும் 68 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே ஆண்டு முடிவில் நடாத்தப்பட்டிருந்தன. இதற்கமைய, மதிப்பிடப்பட்ட தொகையின் 61 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 3.36 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(உ) மொனராகல உப நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மொனராகல மற்றும் பிபிளே வனப் பகுதியில் 1,082 எல்லைத் தூண்களை அமைப்பதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 3,352,831 நிகழ்ச்சித்திட்டத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 1,400,000 கிரயத்தில் 587 தூண்கள் மாத்திரமே 2014 மார்ச் வரை அமைக்கப்பட்டிருந்தன.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

புத்தள பகுதியில் உள்ள 400 மீட்டர் நீள உனவட்டுன வீதியைப் புனரமைப்பதற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின்போது 300 மீட்டர் நீள வீதி மாத்திரமே புனரமைக்கப்பட்டிருந்தமை கணக்காய்வுப் பரிசோதனையின்போது புலனாகியது. எவ்வாறாயினும், மொத்தமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையான ரூபா 1,519,241 மூலம் 400 மீட்டர் வீதி புனரமைக்கப்படவிருந்த போதும், மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 1,122,085 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

**3.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தால் போக்குவரத்துக்குச் செலவிடப்பட்ட ரூபா 1,374,024 மற்றும் விளம்பரச் செலவினமாகிய ரூபா 520,800 என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களை எய்துவதில் நேரடித் தொடர்பற்றனவாக இருந்தன.

(ஆ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் வாடகை அடிப்படையில் வெளி நபர் ஒருவரிடமிருந்து மத்திய நாட்டு உப நிகழ்ச்சித்திட்டம் வாகனம் ஒன்றைப் பெற்றிருந்தது. வருடாந்தம் கூறு விலைகள் கோரப்பட்டபோதும் ஏனைய வாகன வழங்குனர்களது கூறுவிலைகளைக் கருத்திற் கொள்ளாது ஒரே நபரே கடந்த 5 ஆண்டுகளாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். 2010 முதல் 2014 வரை வாகன வாடகைக்கு நிகழ்ச்சித் திட்டத்தால் செலவிடப்பட்ட தொகை ரூபா 2,684,205 ஆகும்.